**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF IIIADDITIONAL CITY CIVIL COURT,

CHENNAI-600 104.

S.C.No.8/2019

Deposition of witness for

PW4 (LW4)

Name : Thiru. K.Guna

S/W Name : Kannan
Age :20
Address :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 13th day of October 2022 .

---

13. 10. 2022

**முதல் விசாரணை**

நான் கதவிலக்கம் எண்.724 கக்கன்ஜி நகர், ஐ.சி.எப். என்ற விலாசத்தில் குடியிருக்கிறேன். அ.சா.1 இறந்த பிரகாஷ் உடைய தகப்பனார். அ.சா.2,3 யார் என்று தெரியாது. ஆஜர் எதிரியை எனக்கு என்னுடைய சிறுவயது முதலே தெரியும். 1.1.2018 தேதியில் காலை 8.00 மணியளவில் நானும் என்னுடைய நண்பர் லோகேஷும் சிறுநீர் கழிக்கவேண்டி வீட்டிலிருந்து ஐ.சி.எப். சிக்னல் அருகில் உள்ள மைதானத்திற்கு சென்றோம். அந்த சமயத்தில் ஆஜர் எதிரி அங்கு நடந்துக்வந்துக்கொண்டிருந்தார். நாங்கள் உள்ளே சென்று பார்த்தபொழுது இந்த வழக்கில் இறந்த பிரகாஷ் இறந்துகிடந்தார். அவரது கழுத்திலும் தோல்பட்டையிலும் குத்துபட்டிருந்தது. அதிலிருந்து ரத்தம் வந்துக்கொண்டிருந்தது. யாரிடம் சொல்வது என்று தெரியாமல் பயந்துபோய் பிரகாஷ் வீட்டிற்கு சென்று அவருடைய பெற்றோர் இடத்தில் பிரகாஷ் மைதானத்தில் இறந்துகிடப்பதாக நானும் லோகேஷும் சொன்னோம். அ.சா.1 மைதானத்திற்கு சென்றார். நாங்கள் வீட்டிற்கு சென்றுவிட்டோம். மைதானத்தில் வாசலில் மேடாக இருக்கும் அதிலிருந்து நானும் லோகேஷும் இறங்கியபொழுது ஆஜர் எதிரி அதன் வழியே ஏறி வந்தார். சம்பவத்தினை

நான் நேரில் பார்க்கவில்லை. இதற்கு முன்னர் எழும்பூர் நீதிமன்றத்தில் இதேபோல சாட்சி பெட்டி ஏறி கூறினேன் அதனை நீதிமன்றம் தட்டச்சு செய்து பதிவு செய்துக்கொண்டது. அதில் நான் கையொப்பமிட்டேன். அப்பொழுது என்னுடைய வயது 15. எனக்கு காட்டப்படுவது அவ்வாறு பதிவு செய்யப்பட்ட வாக்குமூலம். அதில் கண்டுள்ளது என்னுடைய கையொப்பங்கள். அது அ.சா.ஆ.2 வரிசை. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>மனுவின் பெயரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.</u>

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct.

13.10.2022

III Addl. Sessions Judge.
III Addl. Court.

# **DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF IIIADDITIONAL CITY CIVIL COURT,

CHENNAI-600 104.

S.C.No.8/2019

Deposition of witness for

PW5 (LW5 )

Name : Thiru. Lokesh

S/W Name : Kathiresan
Age :
Address :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 13th day of October 2022 .

---

13. 10. 2022

**முதல் விசாரணை**

நான் கதவிலக்கம் எண். 11/5 மேட்டு தெரு, வில்லிவாக்கம், சென்னை-49 என்ற விலாசத்தில் தற்போது குடியிருக்கிறேன். இதற்கு முன்னா் ஐ.சி.எப். கக்கன்ஜி நகரில் குடியிருந்தோம். அ.சா.4 என்னுடைய நண்பா். ஆஜா் எதிரியை எனக்கு சிறு வயது முதலே தெரியும். இந்த வழக்கில் இறந்த பிரகாஷை தெரியும். பிரகாஷின் பெற்றோா்களை தெரியும் அவா்களின் பெயா் தெரியாது. 1.1.2018 தேதியல் காலை சுமாா் 7-8 மணியளவில் நானும் அ.சா.4 மற்றும் 4 போ் சோ்ந்து வீட்டிலிருந்து ஐ.சி.எப். சிக்னல் அருகில் உள்ள மைதானத்திற்கு சிறுநீா் கழிக்க வேண்டி சென்றோம். நாங்கள் எல்லோரும் மைதானத்திற்கு உள்ளே சென்றோம் நான் புதா் ஓரமாக சென்றுவிட்டேன் சிறிது நேரத்தில் அ.சா.4 குணா ஆஜா் எதிரி சூரியாவும், வழக்கில் இறந்த பிரகாஷும் சண்டைபோட்டு அடித்துக்கொணடதாகவும், ஆஜா் எதிரி சூரியா பிரகாஷை கத்தியால் தோள், முதுகு, கழுத்து ஆகிய இடங்களில் குத்திவிட்டதாகவும், பிரகாஷ் இறந்துவிட்டதாகவும் கூறினாா். நான் பிரகாஷ் கிடந்த இடத்திற்கு அருகில் சென்று பாா்த்தேன். பிரகாஷ் இறந்தகிடந்தாா். நான் அங்கு சென்றபோது ஆஜா் எதிரி அங்கு

இல்லை ஓடிவிட்டிருந்தார். அதன்பிறகு நான் வீட்டிற்கு சென்றுவிட்டேன். அ.சா.4 குணா எங்கு சென்றார் என்று எனக்கு தெரியாது. மேற்சொன்ன சம்பவ சமயத்தில் என்னுடைய வயது 14. இதற்கு முன்னர் எழும்பூர் நீதிமன்றத்தில் இதேபோன்று சாட்சி பெட்டி ஏறி கூறினேன். அதனை நீதிமன்றத்தில் தட்டச்சு செய்துக்கொண்டனர். அதில் நான் கையொப்பமிட்டேன். அப்பொழுது என்னுடைய வயது 15. எனக்கு காட்டப்படுவது அவ்வாறு பதிவு செய்யப்பட்ட வாக்குமூலம். அதில் கண்டுள்ளது என்னுடைய கையொப்பங்கள். அது அ.சா.ஆ.3வரிசை. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>மனுவின் பெயரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.</u>

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct.

13.10.2022

III Addl. Sessions Judge.
III Addl. Court.